எம்.சி.ஓ.பி. எண்: 5039/2019 தேதி : 9.7.2024

ம.சா. : 1

பெயர் : திரு. மோகன்ராஜ்

த/பெ. : லேட் திரு. முனியன்

வயது : 33

<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இம்மனுவில் 2-ம் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேலும், என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 12 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 1 முதல் 4, 9-ஆன ஆவணங்கள் 2-ம் எதிர்மனுதாரரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த விபத்து 23.5.2019 அன்று காலை 8.30 முதல் 10.30 மணிக்கு நடந்தது. விபத்து வேளச்சேரியிலிருந்து பள்ளிக்கரணை நோக்கி செல்லும்போது நடந்தது. விபத்து சமயத்தில் நானும், எனது அம்மாவும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம், முன்னால் சென்றவர் திடிரென்று பிரேக் போட்டதினால் அவர் மீது இடிக்ககூடாது என்று சென்ற போது முன்னால் வேகத்தடை இருந்ததினால் அதில் நிலைதடுமாறி கீழே விழுந்து விபத்து நடந்தது. புகார் நான் கொடுக்கவில்லை. கரும்பு ஜூஸ் கடைக்காரர் புகார் கொடுத்தார். என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். முன்னால் எந்த வாகனமும் செல்லவில்லை என்றாலும் என்னுடைய அஜாக்கிரைதை மற்றும் அதிவேகத்தால் தான் இந்த விபத்து நடந்துள்ளது என்றாலும் சரியல்ல. எனது அம்மா கீழே விழுந்து அந்த இடத்திலேயே இறந்து விட்டார். என் அம்மா பின் பக்க தலையில் அடிப்பட்டு தான் இறந்துள்ளார் என்றால் சரிதான். எனது அம்மா தலைக்கவசம் அணிந்திருந்தால், இந்த இறப்பை தவிர்த்திருக்கலாம் என்றால் என் அம்மா அணிந்திருந்தார் அது கீழே விழுந்து விட்டது. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் என்னுடைய மாமா ஏழுமலை என்பவருடையது. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதை காவல் நிலையத்தில் வாங்கி கொண்டார்கள், அதை திரும்பி தரவில்லை. அதன் நகலை தாக்கல் செய்துள்ளேன். விபத்து உங்களின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது, அதனால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும்

மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து உங்களின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி விட்டது. நான் தனியார் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். எனது அம்மாவின் இறப்பு சான்றிதழில் வயது 67 என்று காணப்படுகிறது என்றாலும் ஆதார் அட்டையில் பிறந்த தேதி 23.1.1960 என்று காணப்படுகிறது என்றால் சரிதான். எனது அம்மாவின் தொழில், வருமானம் காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதை தான் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.